தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 600 006

ந.க. எண்.044202 / எம்1 / 08 நாள்:30.12.2008

---

பள்ளிக் கல்வி - ஊரகப் பகுதிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படும் "தமிழ்நாடு கிராமப்புற மாணவர்கள் திறனாய்வுத் தேர்வு" படிப்பு உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு - ரூ.12,000/- லிருந்து ரூ.1,00,000/- ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (இ2) துறை**

அரசு ஆணை (நிலை) எண்.256

நாள்: 22.12.2008
திருவள்ளுவராண்டு 2039
மார்கழி 7

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண்.960, கல்வித்துறை நாள்.11.10.1991
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித எண்.044202 / எம்4 / 08 நாள்.20.08.2008.

---

ஆணை

அரசாணை (நிலை) எண்.960, கல்வித்துறை நாள்.11.10.1991ன் படி ஊரகப் பகுதிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களில் அதிக மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெற்றவர்களுக்கு அரசுத் தேர்வு இயக்குநரால் "தமிழ்நாடு கிராமப்புற மாணவர்கள் திறனாய்வுத் தேர்வு" நடத்தப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவிகள் வீதம் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் உதவித் தொகை ரூ.1,000/- வீதம் நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது எனவும் மேற்கண்ட அரசாணையில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி மேற்படி திறனாய்வுத் தேர்வில் கலந்து கொள்ள மாணவரின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000/- க்கு மிகாமல் இருக்க வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது எனவும் தற்போது பெற்றோர்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ள நிலையில் ஆண்டு வருமானம் ரூ.12,000/-தான் என நிர்ணயம் செய்து வருவாய்த் துறையிடமிருந்து வருமானச் சான்று பெற இயலாத நிலை உள்ளது எனவும், மேலும் இதுபோன்று மத்திய அரசு திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 'தேசிய மீன்ஸ் கம் மெரிட் ஸ்காலர்ஷிப்' திட்டத்திற்கான வருமான உச்சவரம்பு ரூ.1.50 லட்சம் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையிலும், அது போன்றே ஆதி திராவிடர் / பழங்குடியினர் ஸ்காலர்ஷிப் திட்டத்திற்கு வருமான உச்ச வரம்பு உயர்த்தப்பட்டுள்ள நிலையிலும் பெரும்பாலான மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்திற்கும் ஆண்டு வருமான உச்ச வரம்பினை கணிசமான அளவு உயர்த்தி உரிய ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

Scanned with CamScanner

2. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையால் அரசாணை (நிலை) எண்77, நாள்.11.07.2008ல் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியர்களுக்கு உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரின் ஆண்டு வருமான உச்ச வரம்பு 2008-09ம் ஆண்டு முதல் 1,00,000/- ஆக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. தமிழ்நாடு கிராமப்புற மாணவர்கள் திறனாய்வுத் தேர்வானது திறமை உள்ள கிராமப்புற மாணவர்களை ஊக்குவிக்கும்பொருட்டு நடத்தப்படும் தேர்வு என்பதாலும், இத்தேர்வில் கலந்து கொள்ளத் தேவையான பெற்றோரின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.12,000/- என 1991ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டதாலும், தற்போது பெற்றோருக்கான ஆண்டு வருமானம் ரூ.12,000/- என நிர்ணயம் செய்து வருமானச் சான்று வழங்க இயலாது என வருவாய்த்துறை கூறுவதாக மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளதாக பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளதாலும், மேலும் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ்சலுகைகள் பெற பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு தற்போது ரூ.1,00,000/- என பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர்மரபினர் நலத்துறையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையிலும் பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று, தமிழ்நாடு கிராமப்புற மாணவர்கள் திறனாய்வுத் தேர்வில் கலந்து கொள்ள பெற்றோரின் ஆண்டு வருமான உச்ச வரம்பினை ரூ.12,000/- லிருந்து ரூ.1,00,000/- ஆக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அசா.கு.எண்.59506 / கல்வி II / 2008 நாள்.17.10.2008ல் பெறப்பட்டுள்ள இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்
அரசு முதன்மைச் செயலாளர்.

/ உண்மை நகல் /

நகல் : தக்க நடவடிக்கைக்காக அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

Scanned with CamScanner